முருப்பெருமான் துணை

**மகான் பட்டினத்தார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**13.03.2024**, புதன்கிழமை

1. கலியுகத்து ஆன்மீக ஆசானே
கருணை வடிவான அரங்கனே
அழியாமை தந்தருள வந்த
அவதார ஞான தேசிகனே
2. தேசிகனே உன்பெருமை கூறி
தெரிவிப்பேன் துல்லிய ஆசி
ஆசிதனை சோபகிருது சால்திங்கள்
ஆற்றல்மிகு முப்பான் திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 30ம் நாள், 13.03.2024, புதன்கிழமை)
3. வாரமதில் பட்டினத்தார் யானும்
வழங்குவேன் வையகம் வளம்பெற
சோரமின்றி உலகமக்கள் தேற
சுத்த சன்மார்க்க நெறி ஏற்று
4. ஏற்றுமே அரங்கஞானி காட்டும்
இணையிலா பூசை முறையான
ஆற்றல்மிகு ஆறுமுகனார் அகத்தீசனார்
அனைவரும் இவர்கள் மேல் வசமுற்று
5. வசமுற்று நித்ய பூசையாக
வணங்கி முதலில் சங்கல்பமாக
பாசம்வழி குறைகள் பல கூறி
பகலவன் கண்ட பனிபோல் அகல
6. அகலவே அருளாசி தரவேண்டி
அதனுடன் தன்னை அறிகின்ற
வகையான சூட்சுமங்கள் யாவும்
வசமாகிட அருள்செய் தாயே என
7. எனவேண்டி உங்களை அறிந்து
என்னுள் களிம்பு தேகமதில் கிடக்கும்
ஞானசோதி அறிய உண்டான
நல்வழியும் ஞானமும் தா எனவேண்டி

8. வேண்டி வேண்டி விடாது பூசை
வினவிட நித்தம்நித்தம் செய்யவே
உண்டான மும்மல மாசு விலகி
உயர் சோதி அறியக்கூடும்

9. கூடவே தொடரும் பூசையால்
குறுமுனி குருபரன் அருளதுவும்
நாடவே சுழுமுனை தன்னிலே
ஞானசோதி வடிவாகத் தோன்றி

10. தோன்றியே தன்னை அறிவதுடன்
தோற்றமும் முடிவுமான காரணமும்
நன்று தீது யாதெனும் தெளிவுக்கூடி
நமனையே வெல்லும் ஞானபலம்

11. பலமதும் தலைவன் முருகனை
பண்புடன் அறியும் ஞானம்கூடி
சலனமற பிறவாமை வரம்கிட்டி
சாற்றிடுவேன் கலியுக ஞானி ஆவீர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–